DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case no: CC.No.73/2023**

**prosecution witness: Pw 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : | Caste | : |
| Fathers Name | : | calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**Accused present**

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஜீலியட் மேரி | ஜாதி | : |
| த/பெ. | : | தொழில் | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுகா | : | வயது | : |

**02.06.2023**

முதல் விசாரணை:-

1. நான் மண்டபம் முல்லை நகரில் குடியிருந்து வருகிறேன். நண்டு கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். 06.03.2022-ம் தேதி காலை 7 மணிக்கு எதிரியின் மனைவியான செல்வா எதிரி சண்டை போடுவதாக எனது வீட்டிற்கு வந்தார். எதிரி அடிப்பதால் செல்வாவை என் வீட்டில் அடைக்கலம் கொடுத்துவைத்திருந்தேன்.

2. பின்பு மாலை 7 மணிக்கு பைக்கிள் கூட்டி சென்று செல்வாவை அவரது வீட்டில் போய்விட்டேன். அப்போது எதிரி செல்வாவை எங்கடி போனே என்றுஅடித்தார். நான் போய் ஏன் அடிக்கிறீர்கள் என்று கேட்டார். அதற்கு என்னையும் அசிங்கமாக பேசி, கேஸ் டியூப்பை எடுத்து வந்து முதுகில் அடித்து, கழுத்தில் போட்டு அடித்தார். அதன்பின்பு அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் வந்து விலக்கிவிட்டார்கள்.

3. பின்னர் நான் மண்டபம் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான்அதில் உள்ள கையொப்பம் என்னுடையது. அந்த புகார் மனு அ.சா.ஆ-1 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி ஆஜர்இருந்தும் வழக்கறிஞர் ஆஜர் இல்லாததால் குறுக்கு விசாரணை இல்லை என முடிக்கப்பட்டது.